திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலமற்ற ஏழை மீனவர்களுக்கு 699 வீடு களைக் கட்டித்தர மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருப்பதற்காக நான் என்னுடைய பணிவான நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆறு மாதங்களுக்கு முன் னால் இந்த கடற்கரைப் பகுதி கிராமங்களிலே கடல் சீற்றத் தினால் நூற்றுக்கணக்கானவர்களுடைய வீடுகள் இடிந்து விட்டன. எனவே, அந்த மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் முன்னுரிமை இந்தத் திட்டத்தில் அறிவிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வீடு ஒன்றுக்கு தற்போது ரூபாய் 17,000 ஒதுக்கப்பட்டு வருகின்றது, இதை மேலும் அதிகப்படுத்தலாமா என்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. வருகின்ற நிதி ஆண்டிலே மீனவர்களுக்கு வீட்டு மனைகள் அளிக்கும் பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 454, டாக்டர் (திருமதி) வெ. சரோஜா. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

454—

சங்ககிரியில் சுண்ணாம்புக்கல் தூள் செய்யும் தொழிற்சாலை

*4186 டாக்டர் (திருமதி) வெ. சரோஜா :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சங்ககிரியில் சுண்ணாம்புக்கல் தூள் செய்யும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில். அத்தொழிற்சாலை எப்பொழுது ஆரம் பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) இல்லை,

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை,

1992 ஏப்ரல் 2]

டாக்டர் (திருமதி) வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எல்லா வகையிலும் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருந்தாலும் அந்தத் தொழிற்சாலைக்கான மூலப் பொருட்கள் அங்கே கிடைப்பதால், அங்கு அந்தத் தொழிற்சாலையை அமைக்க இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் வரும் ஆண்டிலாவது அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுண்ணாம்புக்கல் கிடைக்கும் தன்மை அந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறது என்பது உண்மை. அதே நேரத்தில் அந்த சுண்ணாம்புக் கற்களை நொறுக்கி, தூளாக்கச் செய்யும் தொழில் நிலையம் அமைக்க தொழில் முனைவர்கள் முன்வருவார்களேயானால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அதனை ஊக்குவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 446, திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

446—

காவிரி கூட்டுக் குடிநீர்த்திட்டத்தில் தாராபுரத்தைச் சேர்த்தல்.

* 4323 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காங்கேயம், வெள்ளகோயில் போன்ற பகுதிகளின் குடிநீர் வசதிக்காக உருவாக்கப்பட்ட காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் தாராபுரம் சேர்க்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) முத்தூர், 6 ஊரகப் பேரூராட்சிகள், தாராபுரம் நகராட்சி, காங்கேயம் நகரப் பேரூராட்சி மற்றும் 86 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூன்றாவது கட்டத்தில் தாராபுரம் நகராட்சி சேர்க்கப்பட்டு அதற்கான முதல் கட்டப் பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 2043 இலட்சம் அமைப்புப் பணிக்கும் (Insstallation) மற்றும் ரூ. 115 இலட்சம் வருட பராமரிப்பு பணிக்கும் அரசு,